**ஆகஸ்ட் – 01**

# TNPSC துளிகள்

- ❖ உத்தரகாண்ட் மாநிலத்தின் ஹரித்வாரில் உள்ள மானசா தேவி கோவிலில் கடுமையான கூட்ட நெரிசல் ஏற்பட்டது.
- ❖ மங்களூருவைச் சேர்ந்த ரெமோனா எவெட் பெரேரா என்ற மாணவி, 170 மணி நேரம் பரதநாட்டியம் ஆடியதன் மூலம் தனது பெயரை உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெறச் செய்து சாதனைப் படைத்துள்ளார்.
- ❖ இந்தியாவின் திவ்யான்ஷி பௌமிக், உஸ்பெகிஸ்தானின் தாஷ்கண்டில் நடைபெற்ற 29வது ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் 15 வயதிற்கு உட்பட்ட மகளிர் ஒற்றையர் பிரிவுப் போட்டியில் பட்டத்தை வென்று வரலாறு ஒன்றைப் படைத்தார்.
- ❖ ஏப்ரல் 22 ஆம் தேதியன்று நடைபெற்ற பஹல்காம் தீவிரவாதத் தாக்குதலில் ஈடுபட்ட மூன்று தீவிரவாதிகள் மகாதேவ் நடவடிக்கை என்ற பெயரில் பாதுகாப்புப் படையினரால் ஜம்மு-காஷ்மீரில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- ❖ இந்தியாவில் முதல் முயற்சியாக, மத்தியப் பிரதேசத்தின் ஜபல்பூரில் இந்தி மொழியில் கற்பிக்கும் ஒரு மருத்துவக் கல்லூரி நிறுவப்பட உள்ளது.
- ❖ 12 இலத்தீன் அமெரிக்க நாடுகளின் கூட்டணியானது, Latam-GPT எனப்படும் அந்தப் பிராந்தியத்தின் முதல் பெரிய செயற்கை நுண்ணறிவு மொழி மாதிரியினை 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் வெளியிட உள்ளது.
- ❖ இந்திய இராணுவமானது சமீபத்தில் அருணாச்சலப் பிரதேசத்தின் கிழக்கு சியாங் மாவட்டத்தில் ட்ரோன் பிரஹார் எனும் பயிற்சியினை நடத்தியது.
- ❖ சீனாவின் யான்டாய் நகரில் உள்ள யான்டாய் பெங்லாய் சர்வதேச விமான நிலையம் (முனையம் 2) ஆனது 2025 ஆம் ஆண்டிற்கான உலகின் 6 மிக அழகான விமான நிலையங்களில் முதல் இடத்தைப் பிடித்தது.
- ❖ இராணுவ மருத்துவமனை ஆராய்ச்சி மற்றும் பரிந்துரை (AHRR) அமைப்பானது, புது டெல்லியில் SHAPE 2025 (நிலையான மருத்துவமனை கட்டிடக்கலை, திட்டமிடல், உள்கட்டமைப்பு மற்றும் உபகரணங்கள்) எனப்படும் முதல் ஆயுதப்படை தேசிய மாநாட்டை நடத்தியது.

# தேசியச் செய்திகள்

## கடல்சார் நிதி உச்சி மாநாடு 2025

- ❖ துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகம் (MoPSW) ஆனது புது டெல்லியில் 2025 ஆம் ஆண்டு கடல்சார் நிதி உச்சி மாநாட்டினை நடத்தியது.
- ❖ இந்த உச்சிமாநாடு ஆனது துறைமுகங்களில் டிஜிட்டல் சார் நிதி உள்கட்டமைப்பை மதிப்பிடுவதற்கும் மேம்படுத்துவதற்கும், அவற்றை முதலீட்டாளர்களுக்குத் தயாராக்குவதற்குமான நிதி சார் டிஜிட்டல் மெச்சூரிட்டி மேட்ரிக்ஸ் (FDMM) எனும் மதிப்பீட்டு கருவியினை அறிமுகப்படுத்தியது.
- ❖ மூலதனச் செலவுகளைக் குறைப்பதற்கும், கப்பல் கட்டும் தளங்கள், கடலோர மையங்கள் மற்றும் உள்நாட்டு நீர்வழிகளில் நீண்டகால முதலீட்டை ஈர்ப்பதற்கும் அமைச்சகம் கடல்சார் மேம்பாட்டு நிதியை (MDF) முன்மொழிந்தது.




## பரஸ்பர சட்ட உதவி - இந்தியா மற்றும் நேபாளம்




India and Nepal Finalize Mutual Legal Assistance Agreement

- இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகள் திருத்தப்பட்ட, நாடு கடத்தல் ஒப்பந்தம் குறித்து செயலாற்றி வருகின்றன, மேலும் குற்றவியல் விவகாரங்களில் பரஸ்பர சட்ட உதவிக்கான ஒப்பந்தத்தையும் இறுதி செய்துள்ளன.
- முந்தைய நாடு கடத்தல் ஒப்பந்தத்தின் செல்லுபடியாகும் காலம் நீண்ட காலத்திற்கு முன்பே காலாவதியானது.
- 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் சீன அதிபர் ஜி ஜின்பிங்கின் நேபாள பயணத்தின் போது, சீனாவுடன், நேபாளம் பரஸ்பர சட்ட உதவி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

## மாநில காவல்துறை தலைமை இயக்குநர்கள் நியமனம்

- மாநில காவல்துறை தலைமை இயக்குநர்/காவல் படைத் தலைவரை (DGP/HoPF) நியமிப்பதற்கான ஒற்றைச் சாளர அமைப்பை மத்திய அரசு அறிவித்துள்ளது.
- இந்த ஒற்றைச் சாளர அமைப்பு ஆனது, ஒன்றிய அரசுப் பணிகள் தேர்வாணையத்தினால் பட்டியலிடும் செயல்முறையை சுமூகமாகவும் விரைவாகவும் செயல்படுத்த மாநிலங்கள் முன்மொழிவுகளை அனுப்ப உதவுகின்ற விரிவான சரி பார்ப்புப் பட்டியல் மற்றும் நிலையான பயன்படுத்த எளிதான வடிவங்களைக் கொண்டுள்ளது.
- 2006 ஆம் ஆண்டின் பிரகாஷ் சிங் வழக்கில் உச்ச நீதிமன்றம் இது தொடர்பான உத்தரவுகளைப் பிறப்பித்தது மற்றும் DGP/HoPF நியமனம் தொடர்பான உள்துறை அமைச்சக வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.


- ❖ உச்ச நீதிமன்றம் மற்றும் MHA வழிகாட்டுதல்களின் படி குறைந்தபட்சம் ஆறு மாத பணிக்காலம் இல்லையெனில் அதிகாரிகள் இந்த பதவிக்கு நியமிக்கப்பட தகுதி அற்றவர்கள் ஆவர்.




# சர்வதேசச் செய்திகள்

## Global Specs 2030 முன்னெடுப்பு


- ❖ உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது 'Global Specs 2030' என்ற உலகளாவிய முன்னேடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- ❖ 2030 ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் மலிவு விலையில் கண் பராமரிப்பு சேவைகள் கிடைப்பதை உறுதி செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ உலகம் முழுவதும் சுமார் 800 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு பார்வை பிரச்சினைகள் உள்ளன, மேலும் அவர்களுக்கு கண் பராமரிப்பு சேவைகள் முறையாக கிடைக்கப்பெறவில்லை.




## விலங்குவழி நோய்களின் உலகளாவிய மதிப்பீடு

- ❖ உலக சுகாதார அமைப்பால் முன்னுரிமை நோய்களாக பட்டியலிடப்பட்ட விலங்குவழி நோய்களின் முதல் விரிவான உலகளாவிய மதிப்பீடு (COVID-19 தவிர்த்து) அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
- ❖ சூனோசிஸ் (zoonoses) என்றும் அழைக்கப்படுகின்ற விலங்குவழி நோய்கள் விலங்குகளுக்கும் மக்களுக்கும் இடையில் பரவும் கிருமிகளால் ஏற்படுகின்றன.
- ❖ உலகளவில், நிலப்பரப்பில் 9.3% அதிக (6.3%) அல்லது மிக அதிக (3%) நோய்த் தொற்று அபாயத்தில் உள்ளது.

- இலத்தீன் அமெரிக்கா மற்றும் ஓசியானியா (18.6%) ஆகியவை மிகவும் ஆபத்தில் உள்ள நாடுகள் ஆகும், அதைத் தொடர்ந்து ஆசியா (6.9%) மற்றும் ஆப்பிரிக்கா (5.2%) உள்ளன.
- உலக மக்கள் தொகையில் சுமார் 3% பேர் அதிக அல்லது மிக அதிக ஆபத்துள்ள மண்டலங்களில் வசிக்கின்றனர்; சுமார் 20% பேர் நடுத்தர ஆபத்துள்ள பகுதிகளில் வாழ்கின்றனர்.




# பொருளாதாரச் செய்திகள்

## 2017-18 ஆம் ஆண்டிலிருந்து வேலைவாய்ப்பு உருவாக்கம்





- 2017-18 ஆம் ஆண்டில் 47.5 கோடியாக இருந்த வேலைவாய்ப்பு பெற்றவர்களின் எண்ணிக்கையானது 2023-24 ஆம் ஆண்டில் 64.33 கோடியாக அதிகரித்தது.
- 2019-20 ஆம் ஆண்டில் 28.7% ஆக இருந்த 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட பெண்கள் மற்றும் தொழிலாளர்கள் இடையேயான விகிதம் (WPR) 2023-24 ஆம் ஆண்டில் 40.3% ஆக அதிகரித்தது.
- 49.8% (2017–18) ஆக இருந்த தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 60.1% (2023–24) ஆக உயர்ந்தது.
- 46.8% ஆக இருந்த தொழிலாளர் மற்றும் மக்கள் தொகை இடையேயான விகிதம் 58.2% ஆக அதிகரித்தது.

- வேலையின்மை விகிதம் 6 சதவீதத்திலிருந்து 3.2% ஆகக் குறைந்தது.
- இளையோர் வேலைவாய்ப்பின்மை விகிதம் சுமார் 17.8 சதவீதத்திலிருந்து 10.2% ஆகக் குறைந்தது என்பதோடு இது உலகளாவிய சராசரியான 13.3 சதவீதத்தினை விடக் குறைவாகும்.

## உரிமை கோரப்படாத வங்கி வைப்புத் தொகைகள் - 2025

- ஜூன் காலாண்டின் இறுதியில் இந்திய வங்கிகளில் உரிமை கோரப் படாத வைப்புத் தொகைகளின் அளவு 67,003 கோடி ரூபாயாக இருந்தது.
- அத்தகைய வைப்புத் தொகைகளில் பாரத் ஸ்டேட் வங்கி (SBI) சுமார் 29 சதவீதத்தைக் கொண்டுள்ளது.
- உரிமை கோரப்படாத அனைத்து வைப்புத் தொகைகளிலும் 87 சதவீதம் பொதுத்துறை வங்கிகளில் பதிவாகின.
- மறுபுறம், தனியார் வங்கிகள் 8,673.72 கோடி ரூபாய் மதிப்பிலான உரிமை கோரப் படாத வைப்புத் தொகைகளை கொண்டிருந்தன.
- இதில் ICICI வங்கி அதிகபட்சமாக 2,063.45 கோடி ரூபாயை கொண்டுள்ளது.





# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## NISAR செயற்கைக்கோள் ஏவுதல்


- இஸ்ரோ நிறுவனமானது இது வரை கட்டமைக்கப்பட்ட மிகவும் விலையுயர்ந்த குடிமை சேவைகள் பயன்பாடு சார்ந்த புவி கண்காணிப்பு செயற்கைக்கோளான நாசா-இஸ்ரோ சிந்தெடிக் அப்பெர்சர் ரேடார் செயற்கைக்கோளை (NASA-ISRO Synthetic Aperture Radar Satellite-NISAR) விண்ணில் ஏவியது.
- NISAR என்பது நில நடுக்கங்கள், பனிப்பாறை இயக்கங்கள், கார்பன் பிரித்தெடுத்தல் மற்றும் பனிப்பாறை ஏரி உடைப்புகள் போன்ற பருவநிலை மாற்றத்தால் தூண்டப் பட்ட பேரழிவுகளைக் கண்காணிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு தொழில்நுட்ப அற்புதமாகும்.
- GSLV-F16 என்பது இந்தியாவின் புவி ஒத்திசைவு செயற்கைக்கோள் ஏவு வாகனத்தின்

(GSLV) 18வது பயணமாகும், மேலும் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட மீக்குளிர் நிலையிலான உந்திகள் கொண்ட (கிரையோஜெனிக்) நிலையுடன் கூடிய 12வது கலமாகும்.

- சூரிய ஒத்திசைவு துருவச் சுற்றுப்பாதையில் ஒரு செயற்கைக்கோளை நிலை நிறுத்த GSLV பயன்படுத்தப்படும் முதல் பணி இதுவாகும்.
- இந்த ஏவுதல் இந்தியா மற்றும் அமெரிக்காவிற்கு மட்டுமல்லாமல், உலகளாவிய முடிவெடுக்கும் மற்றும் அவசரகால எதிர் நடவடிக்கை முயற்சிகளுக்கும் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




## அருகிய கன நீர் மேம்பாட்டிற்கான சோதனை மையம்




- அருகிய கன நீர் மேம்பாட்டிற்கான முதல் தனியார் சோதனை மையத்தினை இந்தியா திறந்து வைத்துள்ளது.
- மும்பையைச் சேர்ந்த TEMA இந்தியா நிறுவனத்திடம், அருகிய கனநீரை மேம்படுத்துவதற்குத் தேவையான உபகரணங்களைச் சோதிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டுள்ளது.
- கனநீர் (D2O) என்பது வழக்கமான ஹைட்ரஜனுக்குப் பதிலாக ஹைட்ரஜனின் கனமான ஐசோடோப்பான டியூட்டீரியத்தைக் கொண்ட ஒரு வகையான நீர் (H2O) ஆகும்.
- தொடர் சங்கிலி எதிர்வினையின் போது வேகமாக நகரும் நியூட்ரான்களை மெதுவாக்குவதற்கு இது குளிரூட்டியாகவும், வேக மிதமாக்கிகளாகவும் பயன்படுத்தப்

படுகிறது.

- D2O திறமாக செயல்பட 99.9% தூய்மையாக இருக்க வேண்டும்.
- ஆனால் காலப்போக்கில், அது ஒளி அல்லது வழக்கமான நீரால் மாசுபடுகிறது.
- எனவே, வடிகட்டுதல் செயல்முறையைப் பயன்படுத்தி அருகிய கனநீரை 99.9% தூய்மையாக மீண்டும் மேம்படுத்த வேண்டும்.
- 2047 ஆம் ஆண்டிற்குள் 100 GW நிறுவப்பட்ட அணுசக்தி திறனை அடைவதை இந்தியா தனது இலக்காக வைத்துள்ளது.
- 8,780 MW நிறுவப்பட்ட திறனுடன் இந்தியாவில் 24 அணு உலைகள் செயல்பாட்டில் உள்ளன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## சாமேகாஸ்ட்ரோடியா ரீகென்சிஸ் - மிசோரம்

- மிசோரம் காடுகளில் 'சாமேகாஸ்ட்ரோடியா ரீகென்சிஸ்' என்ற புதிய ஆர்க்கிட் / மந்தாரை இனம் கண்டறியப்பட்டுள்ளது.
- இந்த அரிய ஆர்க்கிட் இனம் 'சாமேகாஸ்ட்ரோடியா' என்ற அரிய இனத்தைச் சேர்ந்தது.
- இதில் முழுமையாக பச்சையம்/குளோரோபில் இல்லாததால் குறிப்பிடத்தக்கதாக உள்ளது.
- இவை ஊட்டச்சத்துக்களுக்கு சகவாழ்வு பூஞ்சைகளை முழுமையாகச் சார்ந்து உள்ளதால், இது ஹோலோமைகோட்ரோபிக் தன்மை கொண்டதாகவும் மற்றும் ஒளிச் சேர்க்கை செய்ய இயலாததாகவும் உள்ளது.
- இது IUCN அமைப்பின் அளவுருக்களின் கீழ் மிகவும் அருகி வரும் நிலையில் உள்ள இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.




## புதிய புதர்த் தவளை இனங்கள் – மேகாலயா

- மேகாலயாவின் காசி மலைகளில் இரண்டு புதிய வகை புதர்த் தவளைகள் கண்டரியப்பட்டுள்ளன.
- காசி வாழ்க்கை முறைக்கு கௌரவம் அளிக்கும் விதமாக, புதிதாக கண்டறியப்பட்ட இனங்களுக்கு 'ராவோர்செஸ்டஸ் ஜாகாய்டு' மற்றும் 'ராவோர்செஸ்டஸ் ஜாடோ' என்று பெயரிடப்பட்டது.

- 'ஜகோயிட்' என்ற சொல்லிற்கு காசி மொழியில் 'தவளை' என்று பொருள், அதே போல 'ஜாடோ' என்பது காசி வீடுகளில் பரவலாக விரும்பப்படும் ஒரு பாரம்பரிய அரிசி மற்றும் இறைச்சி உணவாகும்.



# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## FIDE மகளிர் உலக சதுரங்க கோப்பை போட்டி 2025

- 19 வயதான திவ்யா தேஷ்முக் ஜார்ஜியாவின் படுமியில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு FIDE மகளிர் உலகக் கோப்பை போட்டியில் வென்றுள்ளார்.
- அவர் உலகக் கோப்பையை வென்ற முதல் இந்தியப் பெண்மணி என்ற பெருமையைப் பெற்றார்.
- அவர் இந்தியாவின் கிராண்ட்மாஸ்டர் ஆன 88வது மற்றும் நான்காவது பெண்மணி ஆவார்.
- அது ஹம்பி, ஆர். வைஷாலி மற்றும் ஹரிகா துரோணவள்ளி ஆகியோருக்குப் பிறகாகும்.
- இதன் இறுதிப் போட்டியானது இந்தியாவைச் சேர்ந்த K. ஹம்பி (ஆந்திரப் பிரதேசம்) மற்றும் திவ்யா (மகாராஷ்டிரா) ஆகியோருக்கு இடையே நடைபெற்றது.




## சன்சத் ரத்னா விருதுகள் 2025

- பதினேழு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அவர்களின் சிறந்தச் செயல்திறனுக்காக புது டெல்லியில் 2025 ஆம் ஆண்டு சன்சத் ரத்னா விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.
- இந்த விருதுகளில், தொடர்ச்சியாக மூன்று முறை பாராளுமன்ற ஜனநாயகத்திற்கு அவர்களின் நிலையான பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக வழங்கப்பட்ட நான்கு

சிறப்பு தேர்வு மன்ற/ஜூரி விருதுகளும் அடங்கும்.

- 2025 ஆம் ஆண்டு விருது பெற்றவர்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த C.N. அண்ணாதுரை (திமுக) அவர்களும் ஒருவர் ஆவார்.
- இந்த விருதுகள் அரசு சாரா அமைப்பால் வழங்கப்பட்டுள்ளன.
- டாக்டர் A.P.J. அப்துல் கலாம் அவர்களின் ஆலோசனையின் பேரில், இந்த விருதுகள் 2010 ஆம் ஆண்டு பிரைம் பாயிண்ட் அறக்கட்டளை மற்றும் பிரசென்ஸ் இணைய இதழ் ஆகியவற்றால் நிறுவப்பட்டன.
- மேலும், டாக்டர் கலாம் அவர்கள் 2010 ஆம் ஆண்டு மே மாதத்தில் சென்னையில் அதற்கான முதல் விருது வழங்கும் விழாவைத் தொடங்கி வைத்தார்.
- குறிப்பாக, இந்த விருதைப் பெற்ற முதல் நபர் ஹன்ஸ்ராஜ் கங்காராம் அஹிர் ஆவார்.




17 parliamentarians awarded Sansad Ratna Awards 2025 for their exemplary performances.

# இதரச் செய்திகள்

## இந்திய ஹாக்கியின் 100 ஆம் ஆண்டு நிறைவு - 2025




- இந்திய ஹாக்கியின் பாரம்பரியம் 1925 ஆம் ஆண்டில் அதன் முதல் தேசிய நிர்வாகக் குழுவை உருவாக்கியதன் மூலம் தொடங்கியது.
- இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கல்லை நினைவு கூரும் வகையில், நவம்பர் 07 ஆம் தேதியன்று ஹாக்கி இந்தியா முன்னெப்போதும் இல்லாத வகையில் நாடு தழுவிய கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்ய உள்ளது.
- இந்த நிகழ்வில் நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆடவர் மற்றும் மகளிர்

பிரிவுகளில் 1,000 போட்டிகள் ஒரே நேரத்தில் நடைபெறும்.

## ஆண்ட்ராய்டு நிலநடுக்க எச்சரிக்கை அமைப்பு

- ஆண்ட்ராய்டு சார்ந்த திறன்பேசிகளுக்கான ஆண்ட்ராய்டு நிலநடுக்க எச்சரிக்கை அமைப்பை கூகிள் உருவாக்கியுள்ளது.
- இது ஆண்ட்ராய்டு சார்ந்த திறன்பேசிகளில் கட்டமைக்கப்பட்ட முடுக்கமானிகளைப் பயன்படுத்தி நிலநடுக்கங்களைக் கண்டறிய வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ஆனால் 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி 06 ஆம் தேதி ஏற்பட்ட பேரழிவு தரும் துருக்கி நில நடுக்கங்களின் போது இது சரியான நேரத்தில் மற்றும் பயனுள்ள எச்சரிக்கைகளை வழங்கத் தவறிவிட்டது.
- கூகிள் ஆண்ட்ராய்டு போன்களுக்கு இரண்டு வகையான எச்சரிக்கைகளை அனுப்புகிறது
    - லேசான நிலநடுக்கங்களுக்கு (ரிக்டர் அளவு 4.5+) விழிப்புடன் இருங்கள் எனும் எச்சரிக்கைகள்
    - வலுவான நிலநடுக்கங்களுக்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான எச்சரிக்கைகள்.





## 2028 ஆம் ஆண்டில் 33 வது பங்குதாரர் மாநாட்டிற்கான குழு

- 2028 ஆம் ஆண்டில் நடைபெற உள்ள 33வது ஐக்கிய நாடுகளின் பருவநிலை மாற்ற மாநாட்டை (COP33) நடத்துவதற்கான ஏற்பாடுகளை இந்தியா தொடங்கியுள்ளது.
- MoEFCC அமைச்சகத்தின் பருவநிலை மாற்றப் பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட COP33 பிரிவு இந்த நிகழ்வை மேற்பார்வையிடும்.
- இந்த குழுவில் இணைச் செயலாளர் (பருவநிலை மாற்றம்), இயக்குநர்கள் மற்றும் ஆலோசகர்கள் உட்பட 11 உறுப்பினர்கள் உள்ளனர்.
- துபாயில் நடைபெற்ற COP 28 மாநாட்டின் போது, பிரதமர் COP 33 மாநாட்டினை இந்தியா நடத்தும் என்று முன்மொழிந்தார்.
- UNFCCC அமைப்பினால் ஏற்றுக் கொள்ளப்பட்டால், 2002 ஆம் ஆண்டில் புது டெல்லியில் நடைபெற்ற COP 8 மாநாட்டிற்கு பிறகு இந்தியா நடத்தும் இரண்டாவது UN பருவநிலை

மாநாடாக COP 33 இருக்கும்.




## இராஜேந்திர சோழனின் கங்கைப் படையெடுப்பு




- கி.பி 11 ஆம் நூற்றாண்டில் முதலாம் இராஜேந்திர சோழனின் வலிமை மிக்க படை கிழக்கு மற்றும் வட இந்தியாவின் பரந்த பகுதிகளைக் கடந்து பயணித்து சென்றது.
- இராஜேந்திர சோழனே தலைமை தாங்கி கங்கைச் சமவெளியை நோக்கி சென்றதாக ஒரு நம்பிக்கை உள்ளது.
- ஆனால் திருவாலங்காடு செப்புத் தகடுகளில் உள்ள கல்வெட்டுகள், மன்னரின் திறம் மிக்க தளபதிகளில் ஒருவர் கங்கை நோக்கிய ராணுவப் படையெடுப்புக்குத் தலைமை தாங்கியதை வெளிப்படுத்துகின்றன.
- கோதாவரி நதிக்கரையிலேயே சோழ மன்னர் தங்கியிருந்தார்.
- K.A. நீலகண்ட சாஸ்திரியின் சோழர்கள் (The Cholas), T.V. சதாசிவப் பண்டாரத்தாரின் பிற்காலச் சோழர் சரித்திரம் (பிற்காலச் சோழர்களின் வரலாறு) மற்றும் R.D. பானர்ஜியின் வங்காளத்தின் பாலர்கள் போன்ற வரலாற்றுப் படைப்புகள் அதை வெளிப்படுத்துகின்றன.

- சோழப் படைகள் கிழக்கு தக்காணத்தில், கடலோர ஒடிசாவில் உள்ள ராஜ்யங்களைத் தோற்கடித்ததையும், இறுதியில் வங்காளத்தில் உள்ள பாலர் வம்சத்துடன் மோதியதையும் இந்தப் படைப்புகள் வெளிப்படுத்துகின்றன.
- உண்மையான படையெடுப்பு ஆனது தெற்கில் உள்ள சோழர்களின் தலைநகரிலிருந்து அல்லாமல், கோதாவரி மற்றும் கிருஷ்ணா நதிகள் முழுவதும் பரவியிருந்த வெங்கி நாட்டின் வடகிழக்கில் இருந்து தொடங்கியது.
- அந்த நேரத்தில் வெங்கி நாடு, சோழர்களுக்கு விசுவாசமான மன்னர்களால் (கிழக்கு சாளுக்கியர்கள் அல்லது வெங்கியின் சாளுக்கியர்கள்) ஆட்சி செய்யப்பட்டது.
- சோழர்களுடன் வெங்கிக்கு நெருங்கிய உறவுகள் இருந்ததாலும், அதன் தெற்கே உள்ள அனைத்துப் பகுதிகளும் ஏற்கனவே இராஜேந்திர சோழனின் பேரரசின் கீழ் இருந்ததால், சக்கரக் கோட்டத்தில் அந்தப் படையெடுப்பின் முதல் வெற்றியுடன் அந்தப் படையெடுப்பு வெங்கிக்கு வடக்கே தொடங்கியது.
- சக்கரக்கோட்டம் இராஜபுரத்திலிருந்து எட்டு மைல் தொலைவில், இந்திராவதி நதியின் தெற்குக் கரையில் அமைந்துள்ளது.
- நவீன காலத்தில், இந்த இடம் சித்திரக்கூடம் (இன்றைய சத்தீஸ்கரில் உள்ள பஸ்தார் பகுதி) என்று அழைக்கப்படுகிறது.
- சக்கரக் கோட்டத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு, சோழப் படை, சிந்தகா குடும்பத்தின் துணிச்சலான ஆட்சியாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த 'மசுன தேசம்' அல்லது 'மசுனி தேசம்' என்ற பசுமையான பரப்புகளை நோக்கி படையெடுத்தது.
- சிந்தகா ஆட்சியாளர்கள் தங்களை நாக வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் என்று அடையாளப்படுத்திக் கொண்டனர்.
- நீலகண்ட சாஸ்திரி, தமிழ் பிரசாஸ்தி ஒன்றை மேற்கோள் காட்டி, மதுரமண்டலம், நாமனைக்கோணம் மற்றும் பஞ்சப்பள்ளி ஆகிய பகுதிகள் அனைத்தும் 'மசுனி தேசத்தின்' கீழ் வந்ததாக கூறுகிறார்.
- மதுரமண்டலம் சோழப் படையால் குறுகிய நேரத்தில் அழிக்கப்பட்டது.
- நாமனைக்கோணம் மற்றும் பஞ்சப்பள்ளி ஆகியவையும் இராஜேந்திரனின் தளபதியால் கைப்பற்றப் பட்டன.
- அதைத் தொடர்ந்து, சோழத் தளபதி வடகிழக்கே மேலும் படையெடுத்துச் சென்று, ஆதிநகரத்தில் இந்திரரதனை தோற்கடித்து, ஒட்டா (ஒடிசா) பகுதிகளையும் கைப்பற்றினார்.
- கோசல இராச்சியத்தைக் கைப்பற்றியதன் மூலம் அவரது படையெடுப்பு மேற்கு நோக்கித் திரும்பியது.
- இங்கு குறிப்பிடப்படும் கோசலப் பகுதி மகாகோசலம் என்றும் அழைக்கப்படுவதோடு இது தட்சிண (தெற்கு) கோசலம் என்று குறிப்பிடப் படுகிறது.
- மத்திய-கிழக்கு இந்தியாவின் மீது ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டைக் கொண்ட நிலையில் அடுத்த இலக்கு, அதன் கிழக்கே இருந்த தர்மபாலரால் ஆளப்பட்ட தண்டபுக்தி ஆகும்.
- தண்டபுக்தி வங்காளத்தில் உள்ள மிட்னாபூர் மாவட்டத்தின் தெற்கு மற்றும் தென்மேற்கு பகுதிகளை உள்ளடக்கியிருந்தது.
- எனவே, அது சுவர்ணரேகா நதியின் இரு கரைகளிலும் நீண்டிருக்கலாம்.
- அங்கிருந்து, சோழப் படைகள் வங்காளத்தை நோக்கி முன்னேறின.
- அங்கு தர்மபாலனைத் தோற்கடித்த பிறகு, இராஜேந்திரனின் படை இரணாசுரனால் ஆளப்பட்ட தட்சிணராதா (தமிழில் தக்கன லாடம்) நோக்கி படையெடுத்தது.

- 'ராதா' (ரட்டா அல்லது லடா என்றும் உச்சரிக்கப்படுகிறது) என்பது வடக்கே கங்கையால் சூழப்பட்ட வங்காளத்தின் ஒரு பகுதியின் பண்டைய பெயர் ஆகும்.
- தட்சிணராதா என்பது வங்காளத்தில் இன்றைய ஹூக்ளி மற்றும் ஹவுரா மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதியைக் குறிக்கிறது, அதே நேரத்தில் உத்தரராதா (தமிழில் உத்தர லடம்) என்பது முர்ஷிதாபாத் மற்றும் பிர்பும் மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதிகளைக் குறிக்கிறது.
- தெற்கு வங்காளம் கைப்பற்றவுடன், அவரின் படைத்தளபதி கிழக்கு நோக்கிச் சென்று, கங்கையைக் கடந்து, பின்னர் கோவிந்த சந்திரரால் ஆளப்பட்ட வங்காள தேசத்தை (கிழக்கு வங்காளம்) அடைந்தார்.
- கிழக்கு வங்காளத்தைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து, இராஜேந்திர சோழனின் படை மேற்கு நோக்கித் திரும்பி மஹிபாலனைத் தோற்கடித்தது.
- தளபதி கங்கையை அடைந்து, ஆற்றில் இருந்து தண்ணீரை எடுத்து வந்து, அதை தனது இறையாண்மை கொண்ட மன்னர் இராஜேந்திரனிடம் கொண்டு வந்தார்.
- தளபதி மன்னரை இராணுவத்தின் ஓய்வின் போது கோதாவரி நதிக் கரையில் சந்தித்தார்.
- கங்கை நீரைக் கொண்டு வருவது ஒருவேளை அப்படையெடுப்பின் நோக்கத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம்.
- ஆனால் உண்மையான நோக்கம் சந்தேகத்திற்கு இடமின்றி சோழப் பேரரசின் சக்தியை வெளிப்படுத்துவதும், வட இந்திய ஆட்சியாளர்களுக்கு அதன் வலிமையை நிரூபிப்பதும் ஆகும்.
- பின்னர் இராஜேந்திரன் வெற்றிகரமான தனது தளபதியுடன் தனது இராஜ்ஜியத்திற்குத் திரும்பினார்.
- பல கல்வெட்டுகளில் குறிப்பிடப் பட்டுள்ளது போல அவர் தனது திரும்பும் பயணத்தின் போது, பல கோயில்களுக்குச் சென்று காணிக்கைகளைச் செலுத்தினார்.
- அத்தகைய ஒரு கல்வெட்டு கங்கை கொண்ட சோழபுரத்திற்கு தென்கிழக்கே பத்து மைல் தொலைவில் அமைந்துள்ள திரிலோகியில் (தஞ்சாவூர் மாவட்டத்தில் திருப்பனந்தாள் என்ற இடத்திற்கு அருகிலுள்ள நவீன திருலோகி) காணப் பட்டது.
- திருலோகியில் பொறிக்கப்பட்ட ஒரு துண்டுப் பதிவு, இந்தக் கிராமத்தில் இறைவனின் புனித பாதங்களை மன்னர் வணங்கிய சம்பவத்தை சுவாரஸ்யமான முறையில் குறிப்பிடுகிறது.
- அது கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து சுமார் 10 மைல்கள் தொலைவில் உள்ளது.
- இந்த இடத்தின் பண்டைய பெயர் திரிய லோகிய மஹாதேவி-சதுர்வேதி மங்கலம் என்று வழங்கப்பட்டது.
- சோழத் தலைநகருக்கு கங்கையின் நீரைக் கொண்டு வருவது மட்டுமே இந்தப் பயணத்தின் நோக்கமல்ல.
- ஆனால், அவ்வாறு செய்வது என்பது பேரரசுக்கு வெளியே உள்ள பிரதேசங்கள் வழியாக ஒரு சரியான உரிமையை நிறுவிய பிறகு அரசரின் வலுவான படை பலத்தினை வெளிப்படுத்துவதாகும்.
- இப்பயணத்தின் முடிவில், இராஜேந்திரன் தனது தலைநகரில் கங்கை நீருடன் சோழ கங்கம் என்ற குளத்தின் வடிவில் 'வெற்றியின் அடையாளமாக ஒரு நீர் நிலை தூணை' (ஜலமயம் ஜெயஸ்தம்பம்) அமைத்தார் என்ற கூற்றிலிருந்து இது தெளிவாகிறது.
- சோழ மன்னரின் படையெடுப்பு நாட்டின் அரசியல் பிளவுகளை மாற்றவில்லை, ஆனால் அது ஒரு குடியேற்றக் குழுவின் வடிவத்தில் ஒரு நிரந்தர அடையாளத்தை அங்கு விட்டுச் சென்றது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★